# கல்லீரல் புற்றுநோய்க்கு நவீன சிகிச்சை!

## கே.எம்.சி.ஹெச்.டாக்டர் விளக்கம்

**கோவை, ஆக.27:** கல்லீரலில் புற்றுநோய் வந்தால் ஒன்றும் செய்ய முடியாது என்று கருதுகிறார்கள். அது உண்மையல்ல. எந்த வகை புற்றுநோயாக இருந்தாலும் அறுவை சிகிச்சையுடனோ, அறுவை சிகிச்சை இல்லாமலோ சிகிச்சை அளிக்கலாம், என்கிறார் கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையின் கல்லீரல், கணையம் அறுவை சிகிச்சை மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் மகேஸ்வரன்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

கல்லீரல் புற்றுநோயின் முதல் வகையானது, ஹெபடிடைஸ் (மஞ்சள் காமாலை) பி, சி, வைரஸ் பாதித்தவர்கள், உடல் பருமன் உள்ளவர்கள், மது குடிப்பவர்கள் ஆகியோருக்கு பாதிக்கப்படும் கல்லீரல், ‘கல்லீரல் சுருக்கம்’ எனும் சிரோசிஸ் நிலைக்கு சென்று விட்டால், அதில் புற்றுநோய் செல் உருவாகி கல்லீரலில் புற்றுநோய் ஏற்படும். சிரோசிஸ் நிலையை பொறுத்து கல்லீரல் புற்றுநோய் பாதித்த பகுதியை மட்டும் அறுவை சிகிச்சையில் எடுத்து விடலாம். அல்லது மாற்று உறுப்பு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்.

கல்லீரல் புற்றுநோயின் 2வது வகையானது, கல்லீரலில் உள்ள பித்தக்குழாயில் ஏற்படும் புற்றுநோய். இதற்கு அறுவை சிகிச்சையே போதுமானது. புற்றுநோய் வீரியத்தை பொறுத்து கீமோதெரபி (Chemotherapy) கொடுக்க வேண்டும். இது தவிர இரைப்பை, கணையம், மலக்குடல் ஆகியவற்றில் ஏற்படும் புற்றுநோய் பரவி கல்லீரலில் புற்றுநோய் ஏற்படும்.



▶ டாக்டர் மகேஸ்வரன்

இது எந்த உறுப்பிலிருந்து பரவியுள்ளது என்பதை பொறுத்து பெருங்குடல், மலக்குடல், கல்லீரல் ஆகிய பகுதிகளில் உள்ள புற்றுநோயை அறுவை சிகிச்சை செய்து எடுத்து விடலாம். கல்லீரல் புற்றுநோயை கீமோதெரபி (Chemotherapy) சிகிச்சை மூலம் திரும்ப வராமல் கட்டுப்படுத்தலாம்.

**நவீன சிகிச்சை:** கல்லீரல் புற்றுநோய் சிகிச்சையை பொறுத்தவரை நவீன சிகிச்சை உள்ளது. ஒருவரின் சீரான கல்லீரலில் 70 சதவீதம் வரை வெட்டி எடுக்கலாம். மீதமுள்ள 30 சதவீத கல்லீரல் 4 முதல் 6 வாரங்களில் 80 சதவீதம் வரை வளர்ந்துவிடும். இதனால் கல்லீரலில் 50 சதவீதம் பாதித்திருந்தாலும் அறுவை சிகிச்சையே போதும். ஒரு வேளை கல்லீரல் புற்றுநோய் பெரியதாக இருந்து, மீதமுள்ள சீரான கல்லீரல் சிறியதாக இருந்தால், புற்றுநோய் பாதிக்கப்பட்ட பகுதிக்கு செல்லும் ரத்த குழாயை தடுத்து (portal vein embolization). சீரான பகுதியை வளரச்செய்து, பின் பாதிக்கப்பட்ட பகுதியை அறுவை சிகிச்சை மூலம் அகற்றிவிடலாம்.

**மேலும் விபரங்களுக்கு, டாக்டர் மகேஸ்வரன், கல்லீரல், கணையம் மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர், கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனை, அவிநாசி ரோடு, கோவை. செல்: 733 9333 485 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம்.**

—Advt